ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2186/27 - 2020 ජූලි මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.07.30
2186/27 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 21/78 (XV) (A)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகக் கருதப்படுகின்ற இலங்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 2164/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்) 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதிய 1603/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளைமூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்.

(1) அட்டவணையில் I ஆம் நிரலில் காணப்படுகின்ற ''மருத்துவ விஞ்ஞான பீடம்'' என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் காணப்படுகின்ற "16. மருத்துவக் கல்வி சுகாதார விஞ்ஞானத் துறை'' என்னும் பதிவீட்டை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவீட்டைச் சேர்ப்பதன் மூலமும்:-

"17. நோய்த்தடுப்பாற்றலியல் மற்றும் மூலக்கூற்று மருத்துவவியல்"; அத்துடன்

1A - PG 5077 - 518 (2020/07)
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) அட்டவணையில் I ஆம் நிரலில் காணப்படுகின்ற "மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பீடம்" என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் காணப்படுகின்ற "15. சங்கீத மற்றும் படைப்பாக்கத் தொழில்நுட்பவியல் துறை" என்னும் பதிவீட்டை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவீட்டைச் சேர்ப்பதன் மூலமும்:-

"17. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை"

**கலாநிதி பந்துல குணவர்த்தன,**
உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
*2020, யூலை 30.*

*08 - 299*